1288

1288/2-57

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

ஜுலை 1957.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஹாஜிகளின் அரிய தியாகம் ... ... ... | 1 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... | 9 |
| ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள் ... ... ... ... | 15 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... | 21 |
| இஸ்லாமிய சரித்திரச் சாரம் (T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... | 27 |

...ஹுல் இஸ்லாம் ஆபீஸ் :

...ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1957
MADRAS

3L
7ஐ211,N12qFL
N57.
187064

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

---

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5


## மிஃராஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மிஃராஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய காயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னுங் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கியிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித்தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித்தெழுதினாலும் முடியாது. கோட்டமிட்ட கண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்..

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

ஜூலை—1957.

## ஹாஜிகளின் அரிய தியாகம்

புனித ஹஜ்ஜு மாதம் வரத்தொடங்கியதும், அகில உலக முஸ்லிம்களின் உள்ளமெல்லாம் பரிசுத்த மக்காவிலுள்ள புனித "கஃபத்துல்லாஹ்வை" நோக்கியே விரைந்து கொண்டிருக்கிறது.

தேக சுகமும், பணவசதியும், வழித்துணையும், பக்தி விசுவாசமும், தியாக மனப்பண்பும் உள்ள முஸ்லிம்கள் பாக்கியவான்களாய் விளங்குகின்றனர்; அவர்கள், ஈதுல் பித்ர் (ரமலான் பெருநாள்) முடிந்ததுமே ஹஜ்ஜு யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு விடுகின்றனர். உற்றார் உறவினர் குடும்பத்தினர்க்குப் போதுமான அளவு செலவு சாதனம் கொடுத்து விட்டு, ஊரார் எல்லோரின் உபசாரமும் ஆசீர்மொழியும் நல்ல துஆவும் பெற்று, ஊரைவிட்டுப் புறப்படுகின்றனர்.

நம் தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் ஹாஜிகளின் நிலைமையை மட்டும் நாம் சீர்தூக்கிப் பார்ப்போம்; பெரும்பாலான நம்நாட்டுப் பிரமுகர்கள், ஹஜ் யாத்திரையை, சென்னைமா நகரிலுள்ள மத்திய (சென்ட்ரல்)ரயில்வே நிலையத்திலிருந்தே ஆரம்பிக்கின்றனர். அங்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் பலர் சென்று, ஹாஜிகளுக்கு தைரியமும் உபசாரமும் கூறி, மாலையிட்டு மரியாதை செய்து வழியனுப்பிவிட்டு வருகின்றனர். ஹாஜிகள் இரண்டு நாட்களுக்குள் ரயில் யாத்திரை முடிந்து பம்பாய் நகரம் போய்ச் சேர்ந்து விடுகின்றனர்.

ஹாஜிகளின சில அத்தியந்த நண்பர்கள், சென்னை மத்திய ரயில் நிலையத்தோடு தங்கிவிடாமல், தாமும் பம்பாய்வரை கூடவே ரயில் பிரயாணம் செய்து, வழிநெடுக ஹாஜிகளுக்கு துணையாக இருக்கின்றனர்.

ஹஜ்ஜுக்குச் செல்லும் நாட்டமுடையவர்கள், ஓரிரு மாதங்களுக்கு முன்னரே, பம்பாய் துறைமுக கப்பல் கப்பெனியாரோடு கடித விவகாரம் நடத்தி, தங்களுக்கு கப்பலில் சென்றுவர இடவசதியும் அனுமதிச்சீட்டும் வேண்டுமென்று கோரி, முன்பணம் செலுத்தி, முன்னேற்பாடு செய்து பதிவு செய்து கொண்டு, பிறகே புறப்படுகின்றனர். ஒரு சிலர், முன்னேற்பாடு செய்து கொள்ளாமல், பம்பாய் வரைப்போய், தக்கபடி கப்பலில் இடவசதியும் அனுமதிச் சீட்டும் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர்; கஷ்டத்துக்குப் பிறகு சிலர் வெற்றியும் பெற்றுவிடுகின்றனர்.

குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட பெயருடைய கப்பல் பல்லாயிரம் ஹாஜிகளை ஏற்றிக்கொண்டு, பம்பாய் துறைமுகத்தை விட்டு "அல்லாஹு அக்பர்" என்று ஜெய கோஷம் கிளப்பிக்கொண்டு அல்லாஹுடைய கிருபையினல் புறப்படுகிறது. அந்தக் கப்பலில், மூன்று வகைப் பிரயாணிகள் இருப்பர். முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஒன்றுக்கு மூன்று பங்கு பணம் கொடுத்து சகலவசதிகளும் பெற்று சுகமாகச் செல்லும் செல்வந்தப் பாக்கியவான்கள். இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த பிரயாணிகளும் ஓரளவு அதிகமான பணம் கொடுத்து குறிப்பிட்ட சலுகைகளோடு சற்று சுகமாகவே பிரயாணம் செய்யும் பாக்கியவான்களே. மூன்ருவது வகுப்பினர், சாதாரணமாய் குறைந்த பட்சப் பணம் கொடுத்து அனுமதிச்சீட்டு பெற்று கும்பலாகக் கூடி அமர்ந்து, சற்று சௌகரியக் குறைவோடு ஹஜ்ஜுக்குச் செல்லும் அரிய தியாகிகளான நற்பாக்கியசாலிக ளாவர்.

ஹஜ்ஜுப் பிரயாணிகள் வீட்டிலிருந்து புறப்பட்டு மக்கா, மதீனு சென்று, ஹஜ்ஜும் ஜியாரத்தும் புரிந்து விட்டுத் திரும்பி வந்து இல்லம் சேரும்வரை, எவ்வளவு ரூபாய் செலவு செய்யவேண்டி வருகிறது என்பதற்கு ஓர் அளவும் கட்டுப்பாடும் கிடையாது. அவரவர் செல்வச் சௌகர்ய வசதிக் கேற்ப எவ்வளவு அதிகமும் செலவு செய்யலாம். குறைந்த பக்ஷம் 2000 (இரண்டாயிரம்) ரூபாய்க்கும் குறைவாக வைத்துக்கொண்டு ஹஜ்ஜுக்குப் புறப்படும், நம் நாட்டு பேதையர்கள், கஷ்டநஷ்டப்பட்டு சிரமசாத்தியமாகத்தான் ஹஜ்

187064

ஜுக்குப் போய்வர வேண்டி ஏற்படுகிறது. ஐயாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம் என ரூபாய்களைத் தாராளமாய் வைத்துக்கொண்டு ஹஜ்ஜுக்குப் போய்வர புறப்படுவோர்க்கு எல்லா வித சௌகர்யங்களும் உண்டு. அதிகமான பிரயாணக் கஷ்டமும், காலதாமதமும் இல்லாமல், துரிதமாகவும் சௌகர்யமாகவும் அவர்கள் சுகமே ஹஜ்ஜுக் கடமையை முடித்துவிட்டு வருகின்றனர்.

உதாரணமாய், ஓர் ஆடம்பரப் பிரியரான பணக்காரப் பிரபு அல்லது நவீன நாகரிக முஸ்லிம் ஹஜ்ஜுக்குப் புறப்படுவதாயின், அவர், ரயிலில் இரண்டுநாள் கஷ்டப்படாமலும், கப்பலில் பத்துநாள் சிரமப்படாமலும், பாலைவனத்து முரட்டு லாரி—பஸ்களில் இடிபடாமலும், ஹஜ்ஜுக் கடமைகளில் கலந்து கொண்டு அங்ஙனமே வீடு திரும்பி வரவும் இக்காலத்தில் நவீன விஞ்ஞான வசதிகள் உண்டு. அதாவது சென்னை ஆகாய விமான நிலையத்திலிருந்து, விமானத்திலேயே அமர்ந்து காலையில் புறப்பட்டு மாலைக்குள் பம்பாய் போய்ச் சேர்ந்து விடலாம். அங்கு ஓர் இரவு சுக நித்திரை புரிந்து சிரம பரிகாரம் செய்து கொண்டு, கப்பல் ஏறிச் சமுத்திர அலைகளோடு போட்டி போடாமல், அங்கிருந்து உடனே அரேபியாவுக்குப் பறந்து செல்லும் பெரிய ஆகாய விமானத்தில் அமர்ந்து, பல மணி நேரங்களுக்குள் சுல்தான் இப்னு சுஊதுடைய அரசாங்கத்தில், விமான தளத்தில் போய் இறங்கி, நல்ல உயர்தர டாக்ஸி மோட்டாரில் அமர்ந்து துரிதமாய் மக்காவுக்கும், மதீனாவுக்கும் போய் வரலாம். ஆண்டவன் கிருபையினால், இப்படிப்பட்ட சுகப் புருஷர்களுடைய ஹஜ்ஜும் நிறைவேறி விடத்தான் செய்கிறது.

ஆனால், சாதாரணமான நிலையில் வாழும் நம் தமிழ் நாட்டு முஸ்லிம்கள், இரண்டு மூன்று ஆயிரம் ரூபாய்ச் செலவுகளுக்குள் சிக்கனமாகப் போய் வரும் ஹஜ்ஜுதான் சர்வ பாக்கியங்களும் அரிய தியாகங்களும் நிறைந்த புனித ஹஜ்ஜு ஆகும். ஏனெனில், ஹஜ்ஜுக்குப் போய்வருவதென்பதே அல்லாஹ்வின் பெயரால் கஷ்டங்களை மேற்கொண்டு, சகித்து, சப்ரு செய்து, சிரமப்பட்டு, தியாகங்கள் பல புரிவதாகும். இக்காலத்தில் சாதாரணமாக, பொதுவாக எல்லா ஹாஜிகளும் சவுகர்யமாகவேதான் போய் தம் ஹஜ்ஜுக் கடமைகளை முடித்து விட்டு வருகிறார்கள் என்று சொல்ல வேண்டும். ஏனெனின், சுமார் 50 அல்லது 60 வருஷங்களுக்கு முன் இருந்த

நிலைமை வேறு; இப்போதுள்ள சவுகர்யங்க ளெல்லாம் அப்போது கிடையாது. இப்போதெல்லாம் ரயிலிலும் சவுகர்யம்; கப்பலிலும் சவுகர்யம்; ஜித்தாவிலுள்ள மக்கா—மதீனு செல்லும் பாதைகளிலும் பஸ்—மோட்டார் சவுகர்யம், ஆங்கு இருப்பிட வசதிகளிலும், உணவு ஆகார வகைகளிலும், பரிச்சயமான போதகர் (முஅல்லிம்) களுடனும் சவுகர்யம். மேலும், இப்னு சுஊது அரசாங்கத்தார் ஆங்காங்கு வழிகாட்டிகளையும், போதனைக்காரர்களையும், ஏஜெண்டு களையும் நியமித்து, ஹஜ்ஜுக்கால பிரயாணிகளுக்கு சகலவிதமான வசதிகளும் உண்டாகவேண்டு மென்று பெருமிதமான ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள் என்று அறிகின்ருேம்.

இவ்வாண்டு, ஏனைய ஆண்டுகளைக் காட்டினும் அதிகமான எண்ணிக்கையில், ஏராளமான முஸ்லிம் சகோதரர்கள், நம் தமிழ் நாட்டிலிருந்தும், மலாயா-சிலோன்-பர்மா, வடநாடுகளிலிருந்தும் ஹஜ்ஜு செய்ய பல திசைகளிலிருந்தும் புறப்பட்டுப் போயிருக்கிறதாகக் கேள்விப்படுகிருேம். எல்லாம் வல்ல அருள் வடிவான அல்லாஹு தஆலா, நம் அந்த முஸ்லிம் சகோதரர்க ளெல்லோருடையவும் ஹஜ்ஜு யாத்திரை சுகமாக முடிவடையவும், அவர்களுடையஹஜ்ஜு வணக்கச் சடங்குகளும் ஜியாரத்துக் காரியங்களும், மற்றும் அமல்களும் நல்ல முறையில் செவ்வனே முடிவடைந்து, இகத்திலும் பரத்திலும் அவர்கள் ஜெயமும் ஈடேற்றமும் பெற்றுய்யப் பெருங்கருணை புரிவானுக.

சோதரீர்! ஹஜ்ஜு என்பது இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஐந்தாவதும் மகத்தானதும், பல தியாகங்கள் நிறைந்ததுமாகும். 'ஹஜ்ஜு' என்ருல் கருதுதல், நாட்டங் கொள்ளுதல், சங்கல்பம் செய்தல், நிறைவேற்றல் என்று பல பொருள்படும். நம் இஸ்லாமிய ஷரீஅத்துப் பிரகாரம், திருமக்காவிலுள்ள 'பைத்துல்லாஹ்' என்னும் அல்லாஹ்வுடைய புனித இல்லத்தை, கஃபாவை தரிசிக்க வேண்டுமென்ற நாட்டங் கொண்டு, புறப்பட்டுச் சென்று, ஆங்கு இருந்து நம் பாவா இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் தொடுத்து நம் நபிகள் நாயகம் முஹம்மது ரஸுலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஈருக, மற்றும் ஸஹாபிகளும், பெரியோர்களும், மகான்களும் எவ்வாறு ஹஜ்ஜு காலச் சடங்குகளைச் செய்து வந்தார்களோ, அதை யெல்லாம் இயன்ற மட்டும் செய்து முடிப்பதே 'ஹஜ்ஜு வணக்கம்—ஜியாரத்து' என்பதாகும்.

பொதுப்படையாய் ஹஜ்ஜு இரண்டு வகைப் பட்டதாகும். (1) ஹஜ்ஜுல் அக்பர், (2) ஹஜ்ஜுல் அஸ்கர். (இவை பெரிய ஹஜ்ஜு, சிறிய ஹஜ்ஜு என்பதாகும்.) துல்ஹஜ்ஜு மாதம் (பக்ரீத் பெரு நாளின் போது) திருமக்காவுக்குள் ஹரம் எல்லைக்குள் போயிருந்து புரியும் சடங்குகளுக்கும், அனுஷ்டிக்கும் வணக்கங்களுக்கும் பெயர் தான் பொதுவாக 'ஹஜ்ஜு' எனப்படுகிறது. அங்ஙனமின்றி, யாரோ ஒரு சிலர், ஏதோ காரியார்த்தமாக திருமக்காவுக்குப் போகும் பாக்கியம் பெற்று அங்ஙனமே அவர்கள், கஃபத்துல்லாஹ்வில் போய் ஜியாரத்து செய்து, தவ்வாப், முதலிய சடங்குகளை நிறைவேற்றிக் கொண்டால் இதற்குப் பெயர் 'உம்ரா' என்பதாகும். துல்ஹஜ் அல்லாத இதர மாதங் களில், அரபு தேசத்தாரும் பிற நாட்டாரும் மக்காவில் தங்கி இருக்க நேரிட்டால், சாதாரணமாய் இஷ்டப்பட்ட காலங்களில் உம்ராவும் ஜியா ரத்தும் செய்வது வழக்கம்; இது நன்மையான நற்காரியமேயாம்.

ஹஜ்ஜில் இரண்டு காரியங்கள் மிக மிக முக்கியமானதாகும். ஒன்று 'அர்பாத்' மைதானத்தில் தங்கி யிருத்தல்; மற்றொன்று கஃபா வை தவ்வாப் (என்றும் பிரதக்ஷணம்) செய்தல். இவை இரண்டும் பர்லான காரியங்கள்.

சாதாரணமாய் ஹாஜிகள் மூன்று சந்தர்ப்பங்களில் திருக்கஃபா வை சுற்றிவந்து தவ்வாப் செய்வார்கள். முதன் முறை மக்காவுக்குப் போய், பைத்துல்லாஹ்வுக்குள் பிரவேசித்ததும் முதன் முதலாக கஃபா வை தவ்வாப் செய்வர்; இதற்குப் பெயர் 'தவ்வாபே குதூம்' என்று பெயர். இது சுன்னத்து. இரண்டாம் விடுத்தம், முறைப்படி ஹஜ்ஜு வணக்கச் சடங்குகளினூடே தவ்வாப் செய்வர்; இதற்குப் பெயர் 'தவ் வாபே ஜியாரத்' என்று பெயர்; இது பர்லு. மூன்றாவதாக ஹஜ்ஜுக் காரியாதிகள் இனிது முடிவடையும் போது இறுதியாக கஃபாவை தவ் வாப் செய்வர்; இதற்கு 'தவ்வாபெ விதாஃ' என்று பெயர். இது வாஜிபு.

ஹஜ்ஜு நாட்களில் முறைப்படி (1) ஸபா—மர்வா மலைகளுக் கிடை வெளியில் ஸஃயி செய்வதும் (2) முஸ்தலிபா என்னு மிடத் தில் தங்கி யிருத்தலும் (3) ஆங்கு குறிப்பிட்ட இடங்களில் பொடிக் கற்கள் எறிவதும் (4) ஹஜ்ஜு காலத்தில் தலை ரோமத்தை சிறிது கத்தரித்துக் கொள்வது அல்லது முழு க்ஷவரம் செய்து கொள்வது (5) கஃபாவை சுற்றிவருவது ஆகிய ஐந்தும் முக்கிய வாஜிப் ஆகும்,

இவையல்லாமல் சுன்னத்துகளும் முஸ்தஹப்புகளும் ஏராளமாக உண்டு; இவை புண்ணியம் கருதி செய்பவையாகும்.

திருமக்காவுக்குப் பழங்காலப் பெயர்: (1) உம்முல் குரா, (2) பக்கத் (3) பல்துன் அமீன் என்பனவாகும். இற்றைக்கு சுமார் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நபி ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்லாம் அவர்கள், தமது இரண்டு வயதுப் பாலகன் 'இஸ்மாயீலை' (அலைஹிஸ்ஸலாமை)யும் அதன் தாயாரையும் அழைத்துக்கொண்டு, ஆண்டவனின் கட்டளைப்பிரகாரம் மக்கா என்னும் அந்தப்பாலைவன மணற்காட்டில் கொண்டுவந்து விட்டுப்போனார்கள். அப்போது, மனித சஞ்சாரமும் கிடையாது; மரகிழலும் கிடையாது; பசுமைப் புற்பூண்டும் கிடையாது; தண்ணீர் தேக்கமும் கிடையாது. அப்படிப்பட்ட இடத்தில், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, அந்தப் பசுங்குழந்தையின் கால்பட்ட இடத்தில் ஒரு நந்நீர் ஊற்றை உண்டாக்கி தண்ணீர் பெருகச்செய்தான். இதுதான் இப்போது, உலக முஸ்லிம்களெல்லாம் புனிதம் எனக்கருதி சுவைத்துப் பருகும் 'ஜம்ஜம்' கிணற்று நீராகும்.

பண்டைக்கால அரபு காட்டின் மணற்காட்டில் தண்ணீர் சுரக்கும் இடத்தில், ஜனங்கள் வந்து சேருவர். குழந்தை இஸ்மாயீலினால் உண்டான நீரூற்றை யணுகி, அங்கு யமன் தேசத்தின் ஒரு பிரயாணக் கூட்டம் (காபிலா) வந்து அனுமதி பெற்றுத் தங்கியது. அந்த இடத்துக்கு பக்கத்—அல்லது உம்முல்குரா (தாய்க் கிராமம் என்று பெயரிட்டனர். அந்தச் சிறு இடமே பெருகிப் பெருகி) இன்று, உலகினரால் பாராட்டப்படும் திருமக்கா என்னும் பெரும் பட்டணமாய் விளங்குகிறது.

அதன்பின், பாவா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அங்கு வந்து மனைவி மக்களோடு வசித்து, ஏக தெய்வத்தை வணங்குவதற்கு ஒரு இடத்தை பள்ளிவாசலாக (மஸ்ஜிதாக) ஒதுக்கி எல்லை வகுத்தார்கள். அது தான் இன்று கஃபத்துல்லாஹ்வாக விளங்கும் புனிதஸ்தலப் பெரும் ஹரமாகவும், பள்ளிவாசலாகவும் விளங்குகிறது. இந்த 'ஹரம்' என்னும் பிராகாரம் பாதுகாப்பு மிக்க புனித ஸ்தலமாய் விளங்குகிறது. அங்கு யாரும் சண்டை போடமாட்டார்; வேட்டையாடமாட்டார்; சிறு பூச்சியையும் கொல்ல மாட்டார். அங்கு மிக மரியாதையாக, ஒழுக்க சீலராய் யாவரும் நடந்து கொள்வர்.

அந்தக் காலத்து மக்காவுக்கும் இந்தக் காலத்து மக்காவுக்கும் மகாப் பெரிய வித்தியாசமுண்டு. இக்காலை, திருமக்காவையும், கஃபத்

துல்லாஹ்பள்ளியையும், பல்லாயிர மின்சார (எலக்டிரிக்) விளக்குகள் அலங்கரித்துப், பிரகாசத்துடன் விளங்குகின்றது. பழங்கால ஒட்டகை வாகனங்கள் குறைந்து, மோட்டார்களும், பஸ்களும், லாரிகளும் எங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆங்காங்கு டெலிபோன் வசதிகளும், போலீஸ் பாதுகாப்பும், நகர பரிபாலனமும், அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையும் உண்டு. ரேடியோ வசதியும் உண்டு; ஒலிபெருக்கிக் கருவிகளும் உண்டு. மற்றெல்லா நவீன நாகரிக நல்ல சவுகர்யங்களும் உண்டு. பணம் இருந்தால் சகல உல்லாசங்களையும் வேண்டுவோர் பெறலாம்.

நம்நாட்டிலிருந்து (இந்தியாவிலிருந்தும் பாக்கிஸ்தானிலிருந்தும்) ஹாஜிகள் புறப்பட்டு செல்லும் கப்பல், அதன் (ஏடன்) துறைமுகத்தைக் கடந்து, யலம்லம் என்னும் மலைக்குன்றுகள் அருகில் செல்லத் தொடங்கியதும், கப்பல் நிறுத்தப்பட்டுவிடும். அப்போது ஹாஜிகள் குளித்து முழுகி (குஸ்லு செய்து) ஒலுவு செய்து 'இஹ்ராம்' கட்டி, ஹஜ்ஜுக் குரிய நிய்யத்து செய்து கொள்வர்,

"லப்பைக்க, அல்லாஹும்ம லப்பைக்க, லப்பைக்க,
லாஷரீக்க லக்க லப்பைக்க, இன்னல் ஹம்த, வந்
நிஃமத்த லக்க, வல் முல்கு லாஷரீக்க லக்க..."

என்று அடிக்கடி ஓதத் தொடங்கி விடுவார்கள். இதிலிருந்து ஹஜ்ஜுக்குரிய காரியங்களும், ஓதல்களும், வணக்கங்களும், பரம்பரைச் சடங்குகளும் ஆரம்பமாய்விடும். ஹாஜிகள் பயபக்தியோடு இருப்பர். உலக ஆபாச எண்ணங்களை யெல்லாம் விட்டுத் தொலைத்து, யாவரும் தூய்மை யடைந்து விடுவர்.

ஹஜ்ஜுக் கால அற்புதக் காட்சிகளிலொன்று, "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்" என்பதுபோல் எல்லோரும் ஒரே நாயனை நினைத்துக் கொண்டு, ஒரே மாதிரி வெள்ளைத்துணி உடுத்திப் போர்த்திக் கொண்டு, ஒரே மாதிரியான வணக்க ஒழுக்கக் காரியங்களில், ஏக காலத்தில், சரிசமத்துவமாய் இனிது ஈடுபட்டிருப்பதாகும். இந்தமாதிரியான ஆத்மார்த்தக் காட்சியை உலகில் வேறெங்கும், வேறெந்த மதக்காரர்களின் வைதிக வைபவங்களிலும் காண முடியாது. இலக்ஷக் கணக்கான முஸ்லிம்கள், ஒரே மாதிரி ஒரே எண்ணத்துடன், ஒரே இடத்தில் ஒரே விதமாக ஒரே இறைவனை வணங்குவது பேரானந்தப் பரவசம் ஊட்டும் காட்சியாகும். இதில் கலந்து கொள்வோரே கண்ணியவான்கள்; இதைக் காண்போரே பாக்கியவான்கள்;

இதை உணர்ந்து அனுபவிப்போரே உத்தமோத்தமர்கள். இவர்களே நல்லடியார்கள்; ஹாஜியுல் ஹரமைன்கள்.

பொதுப்படையாக இஹ்ராம், நிய்யத்து, தவ்வாபு, முஸ்தலிபா, அர்பாத், மினு, ஜம்ரத், ஸஃயி, தொழுகை, குர்பானி, ஜம்ஜம் ஜல பானம் ஆகியவைகளோடு ஹஜ்ஜு முடிவடைந்து விட்டது என்றே கருதப்படும். ஆனால் ஹஜ்ஜின் கடமைகளி லொன்று என்றில்லாத மற்றுமோர் முக்கியமான காரியமுண்டு. அதாவது, புனித மதீனு நகர் சென்று லோக தயாளர் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய 'மஸ்ஜித் நபவி' என்னும் பள்ளிவாசலில் தொழுதுக் கொள்வதும், எம்பெருமானர் (ஸல்) அவர்களுடைய 'ரவ்லா' என்னும் கப்ரை ஜியாரத்து செய் வதும், அப்பெருமானர் (ஸல்) அவர்கட்கு ஸலாம் சொல்வதுமாகும்.

மேலும், இஸ்லாமிய சரித்திர பூர்வமான இடங்களும், நிகழ்ச்சி ஸ்தலங்களும், காணத்தக்க காட்சிகளும் திருமதீனுவை யடுத்துப் பல உண்டு. பல ஹாஜிகள் முதலில், மக்காவுக்குச் சென்று முதல் தவ்வாப் செய்து விட்டு, நேரே திருமதீனுவுக்குப் போய் திருநபி (ஸல்) அவர் களின் அருள் பெற்று வந்து பிறகே, மக்காவில் தங்கி ஹஜ்ஜுக் கடமைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புவார்கள். மற்றுஞ் சிலர், முதலில் ஹஜ்ஜுக் கடமைகளை முடித்துக் கொண்டு பிறகு நிம்மதியாக மதீனு நகர்த் திருப்பள்ளியில் சில நாள் தங்கி, ஆத்ம சாந்தி பெற்ற பின், நிம்மதியாய் மறு மாதங்களில் ஆர அமரவீடு திரும்புவார்கள்.

குறிப்பாய், ஹஜ்ஜுக்குச் செல்லும் பாக்கியம் பெற்றவர்கள் எல்லாவித நற்பாக்கியங்களும் பெற்றவர்களாவர். அவர்கட்கு இகபர இருலோக சாதனங்களும் ஏக காலத்தில் கிடைத்து விடுகின்றன. ஹாஜிகள், ஆங்கு கஃபா பள்ளியிலேயே சகல பாபங்களை விட்டும் பரிசுத்தம் அடைந்து விடுகிறார்கள். அவர்களின் உள்ளமும் ஆத்மா வும் தூய்மை அடைந்து விடுகின்றன. உண்மை ஹாஜிகளின் உள்ளத்திலிருந்து என்றென்றைக்கும் உலக ஆசாபாசங்களும் அற்று ஒழிந்துப் போகின்றன. அவர்கள், ஊர்வந்து சேர்ந்து வீடடங்கி, வியாபாரம்-தொழில் புரிந்த போதிலும், 'தாமரை இலை நீர்த் துளி' போல் பற்றில்லாமலே, தூய வாழ்வு வாழ்ந்து வருவார்கள். எல்லாம் வல்ல இறைவன் நம் எல்லோருக்கும் புனித ஹஜ்ஜுடைய பூர்ண பாக்யத்தைத் தந்தருள்வானுக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா
## அல்லது
# துப்பு துலக்கிய தூயவர்.

### 9-வது அத்தியாயம்.

உதகமண்டலத்துக்கு உல்லாசப் பிரயாணம் புறப்பட்ட மரியம் அமைதியாக அமர்ந்திருந்தாள். 'லிமோஸின்' காரின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த அவளுக்கும் அவளது கணவனுக்கு மிடையே அளந்து பார்க்க முடியாத தூரமிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இரண்டொரு தடவை அக்காரிகை கணவன் மீது கடைக் கண் பார்வை செலுத்தினாள். சிந்தனை வெள்ளத்தில் மூழ்கியிருந்த அவன் அவளைக் கண்ணெடுத்தும் பார்க்க வில்லை. அவனது முகத்தையும் முக பாவனையையும் கவனித்த போது அவை நல்ல நினைப்புகள் அல்ல என்பது புலனாயிற்று. நகங்களைக் கடித்த வண்ணமிருந்த அவனது கண்களினிடையே சுருக்கம் விழுந்திருந்தது.

மலை வழியாக கார் சென்று கொண்டிருந்த போது அவள் பக்கமாகத் தலையைத் திருப்பி அவன் சொன்னான்:

"நாளை காலை நாம் வெளியூர் புறப்படப் போகிறோம்"

காரிகை கவலையிலாழ்ந்தாள். கண் கலங்க அவள் சொன்னாள்:

"உதகையில் ஒரு வாரம் தங்கியிருப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன். எனது தந்தையிடம்..."

"அதைப் பற்றி என்ன?" முரட்டுத்தனமாக அவன் வினவினான். கார் பிரயாணத்தின் போது கவலையளித்துக் கொண்டிருந்த பிரச்னை பற்றி தைரியமாக அவள் கேட்டாள்.

"நிகாஹ் முடிந்து வீட்டுக்கு வந்த போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? என்னைத் திகிலடையச் செய்து விட்டீர்களே."

காதர்கான் மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

"உன்னைத் திகிலடையச் செய்தேனா? அப்படியா? உனக்கு நிகழப் போவது அதுதான் என்றால் நீ அதிர்ஷ்டமுள்ள அணங்கு ஆவாய்"

"ஆனால், நீங்கள் மிகவும் மாறி விட்டீர்கள்" அவள் பிரமித்து கூறினாள். "உங்களை மணந்து கொள்ள வேண்டுமென நான் விரும்பவில்லை. நீங்கள் விரும்புனீர்கள் என்று எண்ணினேன்......எனது தந்தையும் அக்கரை காட்டினார்."

"உனது தந்தை மிகுந்த அக்கரை காட்டினர். பணமும் பண்பும் படைத்த ஒருவனை நீ மணந்து கொள்ள வேண்டு மென்பதில் அவர் அளவிலா அக்கரை காட்டினர். அத்தகைய மனிதனை மணந்து கொண்டிருக்கிறாய் அல்லவா?" பெரு விரலைத் தூக்கிக் காட்டி "உனது தந்தையை இம்மாதிரி நான் ஆட்டிவைப்பேன் என்று இன்று காலை நான் சொன்னபோது, உணர்ந்து தெரிந்துதான் சொன்னேன். உனது தந்தை அயோக்கியன் என்பது உனக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன்."

பூங்கொடியாள் புன்னகை கொள்ளவில்லை; பிரமிப்படைந்தாள். முகம் வெளிரிப்போயிற்று.

"நீங்கள் எவ்வாறு அவ்வாறு சொல்லலாம்?" கோபத்தால் குரல் கடுங்க அவள் வினவினள். "அது உண்மையல்ல வென்பது உங்களுக்குத் தெரியும், ஆம் உங்களுக்குத் தெரியும்."

அலுப்புடன் கண்களை மூடிக் கொண்டான் காதர்கான்.

"உனக்கு ஞானோதயம் ஏற்பட்டுக் கொண்டே யிருக்கிறது. ஹோட்டல் செல்லும் வரை நாம் காத்திருப்பது நல்லதென்று நான் நம்புகிறேன்."

புயலுக்குப் பின் அமைதி நிலவுவதைப் போல இந்த சண்டைக்குப்பிறகு சமாதானம் நிலவியது. உம்மத் உணவு விடுதிக்கு முன்பு கார் நின்றது. காதர்கான் புன்னகையை வரவழைத்துக் கொண்டு வினயமானவன் போல நடித்தான். அவர்களிருவரும் அறைக்குச் சென்று கதவை மூடும் வரை அவன் அந்த மாதிரி நாடகம் நடித்தான்.

தொப்பியையும் சொக்காயையும் கழட்டிக் கொண்டே அவன் சொன்னன்: "இப்போது நீ சில உண்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டியவளாக விருக்கிறாய்; விரைவில் அந்த உண்மைகளை உணர்ந்து கொள்ளத்தான் போகிறாய். நீங்களெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறபடி நான் காப்டன் காதிரி அல்ல. எனது உண்மைப் பெயர் காதர்கான். ஆறு மாதங்களுக்கு முன்பு வரை எனது தந்தை சிறைக் கைதியாக இருந்தார். அவரை உனது தந்தை சிறை புகச் செய்தான்."

வாயைப்பிளந்து திகிலும் திக்பிரமையு மடைந்தவளாய், மௌனமாக, அவன் கூறியவற்றை அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"கரீமுல்லாகான் கொள்ளைக்காரன் இல்லை, பதினைந்து வருடங்களுக்கு முன்பு அவன் அவ்வாறிருந்தான். அப்போது எனது தந்தையுடன் சேர்ந்து கப்பல் கொள்ளையில் சம்மந்தப்பட்டு பத்து லட்சம் ரூபாய் சேர்த்துக் கொண்டதோடு, எனது தந்தையைக் காட்டிக் கொடுத்து விட்டான். இப்போது கண்ணிய மிகு கான் சாஹிபாகக் காலங் கழித்து வருகிறான்"

"காட்டிக் கொடுத்து விட்டாரா?" திகிலுடன் அவள் வினவினாள்.

அமைதியாக அவன் பதில் சொன்னான்: "ஆம், அவரை உனது தந்தை காட்டிக் கொடுத்து விட்டான். தொழிலில் நுட்ப விஷயங்களை உனக்கு உனது தந்தை உணர்த்தாமலிருப்பது என்னை வியப்பிலாழ்த்துகிறது. தோழனுக்குத் துரோகம் செய்தான்; எனது தந்தைக்கு இருபது வருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது."

"அது உண்மையல்ல." கோபாவேசத்துடன் அவள் கூறினாள். "இக்கதையை நீங்கள் புனைந்து கூறுகிறீர்கள். எனது தந்தை தரகர். அவரது வாழ்வில் நாணயக் கேடான செயலைச் செய்தது கிடையாது. அவ்வாறு அவர் செய்திருந்தாலும், துணைவருக்குத் துரோகம் செய்திருக்க மாட்டார்."

அவளது பதில் காதர் கானுக்கு ஆச்சரியம் அளித்தது.

"தரகர் என்று தந்தையை வர்ணிக்கிறாய்? இல்லை, அவன் தரகன் அல்ல; தகர்த்தெறிவோன். பாங்க்களையும் வியாபார ஸ்தலங்களையும் தகர்த்தெறிபவன். உனது தந்தை அயோக்கியன். அவன் அயோக்கியனென்பது சிப்கத்துல்லாவுக்குத் தெரியும். இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாவுக்கும் இந்த விஷயம் தெரியும். தரகனொருவன் தப்பறிவோனுடன் சினேகம் பாராட்டி வர வேண்டிய அவசியமென்ன? உனது முகம் ஏன் விகார மடைகிறது? உனக்கு நல்ல கல்வி புகட்டுவதிலும் அவன் தவறி விட்டான்."

"சிப்கத்துல்லா சாஹிபுக்குத் தெரியுமா?" பீதியும் பிரமிப்புமடைந்தவளாய் அவள் வினவினாள். "எனது தந்தை...என்பது சிப்கத்துல்லாவுக்குத் தெரியும் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. நீங்கள் கூறியன வெல்லாம் பொய்கள். எனது தந்தை அயோக்கிய நடத்தையுள்ளவரென்றால் என்னை ஏன் மணந்து கொள்வதற்கு நீங்கள் விரும்ப வேண்டும்?"

திடீரென உண்மையை உணர்ந்து கொண்டு, புன்னகை புரியும் புல்லனைப் பீதியுடன் பார்த்தாள் அவள்.

"நீ ஊகித்து உணர்ந்து கொண்டாயா? பல்லாண்டுகளாக கரீமுல்லா கானை கண்ணியில் சிக்கவைப்பதற்காக நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். அம் முயற்சியில் நாங்கள் வெற்றி கண்டு விட்டோம் என்று நினைக்கிறேன். இப்போது நீ விரும்பினால், உனது தந்தைக்கு உண்மையை உணர்த்தலாம். டெலிபோன் அருகில் இருக்கிறது. அவனை அழைத்து அவனிடம் சொல். காப்டன் காதிரியின் போர்வை போர்த்தியிருந்தவன் உண்மையில் கரிம் ஷரீபின் மைந்தன் காதர்கான் என்பதை எடுத்துரை. உனது வளமான வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்ச்சி கரமான மண வாழ்க்கையைப் பற்றியும் கனவு

கண்டு காரியமாற்றிய தெல்லாம் கவைக்குதவாது போயிற்று என் பதைத் தெரிவித்து விடு. டெலிபோனில் அவனை அழைத்துச் சொல்லு. என்னை மணந்து கொள்வதற்கு விருப்பமும் சம்மதமு மில்லா விடினும் தந்தையைத்திருப்தி செய்வதற்காகவே மணஏற்பாட் டுக்கு உடன் பட்டதாக உரை. எந்த விதத்திலும் அவனை அதிர்ச்சி யுறச் செய்ய வேண்டும். இப்போதே 'அதிர்ச்சி வைத்தியம்' துவங்க லாம்"

"உம்மை அவர் துண்டம் துண்டமாக வெட்டி யெறிந்து விடு வார்" ஆத்திரத்துடன் அவள் அலறினள்.

"அவன் அவ்வாறு செய்யலாம். அது நல்ல எண்ணம் ஆகும். கரீமுல்லாவையும் 'கண்ணி'யில் சிக்க வைத்து விடுவோம். ஆனல் என்னை அவன் கொன்று போடுவான் என்று நான் நினைக்கவில்லை. அவனது கையில் துப்பாக்கியைக் கண்டதும் அவனைச் சுட்டுவீழ்த்தி விடுவேன். ஆனல் அதனல் அவனிடம் விஷயத்தைச் சொல்லதிருந்து விடாதே."

கைகளை நீட்டி அவளைக் கட்டியணைக்க அவன் முன் வந்தான். வெறுப்புடன் விலகி நின்ருள் அவள்.

"திட்டமிட்டுக்காரியம் சாதித்திருக்கிறீர்களா? பழி வாங்கும் படலமா, என்ன?"

அவன் "ஆம்" என தலை யசைத்தான். "ஆனல் சிப்கத்துல்லா வுக்குத் தெரியாது, தெரியவே தெரியாது."

அவனது முகத்தில் அவள் மாறுதல் கண்டாள்.

"அவருக்குத் தெரியும்," அவனை நோக்கி சுட்டு விரலைக் காட் டினள். "அவருக்கு நிச்சயமாகத் தெரியும்."

"அவன் அறிவான். ஆனல் உதகைக்கு உல்லாசப் பிரயாணம் புறப்படுவதை அவன் அனுமதித்தான்." காதர்கான் சொன்னன். "எங்களைச் சேர்ந்தவன் அவன். தோழர்களாகிய நாங்கள் ஒருவரை யொருவர் காட்டிக் கொடுப்பதில்லை. ஆம், அவன் எங்களிலொருவன்."

அவள் கிழே உட்கார்ந்து, கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவள் அழுது கொண்டிருக்கிருள் போலும் என முத லில் அவன் எண்ணினன். முகத்தை மேலே உயர்த்தியபோது, அவ ளது கண்களில் வாட்சியைக் கண்டான். அவனுக்கு அசாதாரண மாகத் தோன்றியது மற்ருென்று: அவளிடம் குடி கொண்டிருந்த பய மும் மறைந்து விட்டிருந்தது.

"உம்மை சிப்கத்துல்லா சாஹிப் கண்ட துண்டமாக வெட்டி யெறிந்து விடுவார். அவருக்குத் தெரிந்திருந்தால், உம் மோடு நான் புறப்பட்டு வருவதை அவர் அனுமதித்திருக்க மாட்டார். அறிந்

திருந்து அவர் அவ்வாறு அமைதியாக இருந்திருப்பார் என்று நினைப்பது நியாயமல்ல.''

காதர்கான் கவலையுற்ருன். சிப்கத்துல்லா வஞ்சம் தீர்த்து விடுவார் என்பது இக் கவலைக்குக் காரணமல்ல. அவளது அமைதி அவனை அச்சுறுத்தியது. சிறிது நேரம் நிலைமையை நிதானித்துணர்ந்து கொள்ள முடியாமல் நிலை தடுமாறினன் அவன். அவள் பேசியவை தர்க்க ரீதியாக அமைந்திருந்தன. சிப்கத்துல்லா வஞ்சம் தீர்க்க வந்து விட்டாரோ என்று எதிர் பார்ப்பது போல சுற்று முற்றும் பார்த்தான் அவன். நிலைமையை நிதானித்துணர்ந்ததும் அவன் முறுவலித்தான்.

''சிப்கத்துல்லாவா? சிப்கத்துல்லா என்ன செய்ய வேண்டுமென எதிர் பார்க்கிருய்? சிறையிலிருந்து பறந்தோடி வந்துள்ள 'பறவை' அவன். அவனைச் சில சமயம் 'சிறைப் பறவை' என அழைப்பதுமுண்டு. குடும்ப வழி முறைகளுக்குப் பழக்கப்படுத்திக் கொள்ளு முன்பு நீ பல விஷயங்களைப் படித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.''

அவள் பக்கமாகச் சாய்ந்து, அவள் தோள் மீது அவன் கை போட்டான்.

''கண்ணே! நீ இரு காரியங்களிலொன்றைச் செய்தாக வேண்டும். கரீமுல்லாவை அழைத்து அவனுக்கு அறிவுறுத்தலாம்; அல்லது இப்போதுள்ள நிலையில் திருப்தி கொண்டு சும்மா இருந்து விடலாம்.''

துள்ளி யெழுந்த வண்ணம் அவள் சொன்ஞள்: ''எனது தந்தையைக் கூப்பிடுகிறேன்.'' டெலிபோனைச் சமீபிக்கு முன்பு அவளைச் சேர்த்துக் கட்டி பின்னுக்கு இழுத்தான்.

''எவரையும் நீ கூப்பிட வேண்டியதில்லை. வேறு வழி எதுவுமில்லை. நீ எனது மனைவி. பண்பில்லா பன்றியின் மகளை மணந்து கொள்ளு மளவுக்கு என்னைத் தாழ்த்திக் கொண்டேன். மரியம்! மகிழ்ச்சியோடு முத்தம் தா. அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? இது வரை தாராளமாக அன்பை நீ வெளியிட வில்லை. உனக்கு பீதியளிக்கக் கூடா தென்பதற்காக உன்னை நான் வற்புறுத்தவுமில்லை. எப்போதும் கண்ணிய மிகு கனவான் போல நடந்து வருகிறேன்.''

திடீரென அவனது கரங்களில் அவள் சிக்கிக் கொண்டாள். திமிறினள், திணறினள். அவளது உதடுகளை முத்த மிட முயற்சித்தான் அவன். அவனது சொக்காய்க்குள் முகத்தை மறைத்துக் கொண்டாள். பயங்கரமாக அவளை அவன் உலுக்கி அசைத்ததில் அவளது தோல் வலி கண்டது. ஆவேசமும் ஆத்திரமும் கொண்ட அவனது முகத்தைக் கண்டு அவள் அதிர்ச்சியுற்ருள்.

''மரியம்! நீ என் அடிமை; என்னிடம் சிக்கிக் கொண்டிருக்கும் புழு.'' வெற்றிப் பெரு மிதத்துடன் அவன் உறுமினன். தகுந்த முறையில் உன்னை நான் வசப் படுத்தியிருக்கிறேன். சட்டப்படி,

சாக்ஷிகள் முன்பு நீ எனது மனைவி ஆகி விட்டாய். இந்த உண்மையை உணர்ந்து கொண்டிருக்கிறாயா? உனக்கும் எனக்கு மிடையே எந்த மனிதனும் குறுக்கே நிற்க முடியாது.''

தன் பக்கமாக அவளை இழுத்து அவளது வெளிரிய முகத்தைக் கரங்களால் பற்றித்தனது முகத்துக்குச் சமீபமாகக் கொண்டு சென்றான். காமாந்தகார கயவனின் வெறியைக் கண்ட அவள், வெறுப்பும் பயங்கரமும் உந்த உக்கிரமாக உலுப்பி அவனிடமிருந்து தன்னை மீட்டுக் கொண்டாள். கதவைத் திறந்து பிரமையுடன் பிரமித்து நின்றாள்.

கதவுக்குப் பக்கத்தில் 'பூதம்' போல தடித்த பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். அவளது உடையிலிருந்து அவள் ஹோட்டல் சிப்பந்தி யென்பது புலனாயிற்று.

''நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? வெளியே போ'' உறுமினான் காதர்கான்.

''நீர் ஏன் இம்மாதிரி பேசுகிறீர்? கெட்ட பேச்சு பேசாதீர். ஹோட்டல் சிப்பந்தி நான்''—சீறினாள் அவள்.

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு மரியம் தப்பியோடி அறைக்குள் சென்று கதவைச் சாத்தி பூட்டுப் போட்டாள்.

(தொடரும்)


## ஸீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலீபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதல் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

## 6—வது பகுதி.

### இமாம் ஷாபிஈயைப் பின்பற்றுவோர் கொள்கை

ஷாபிஈ இமாம் அவர்களைப் பின்பற்றுவோர், அவர்களிடத்தில் அளவுக் கதிகமான அபிமானம் வைக்கிருர்கள். அவர்கள் 'முகல்லிதீன்' என்றும், 'முஃதகிதீன்' என்றும் இருவகைப் படுவார்கள். முகல்லிதீன் என்பவர்கள், இமாம் ஷாபிஈ (ரஹ்) வுடைய ஷரீஅத்து என்னும் மத்ஹபை முற்ற முற்ற பின்பற்றி ஒழுகுபவர்களாவர். முஃதகிதீன் என்ருல், மத்ஹபைப் பின்பற்ருவிடினும் அபிமானமும் உறுதியான நம்பிக்கையும் கொள்பவர்களாவர். எனவே, ஹனபி, மாலிக்கி, ஹன்பலி மத்ஹபு காரர்களில் சிலர், இமாம் ஷாபிஈ (ரஹ்) வுடைய அறிவாற்றலைப் பாராட்டுபவர்களாகவும், புகழ்பவர்களாகவும் இருக்கலாம். எனவே இவர்கள் முஃதகிதீன்கள்.

எனவே, அவரது அபிமானிகள் சிலர், ஷாபிஈ இமாமைப் பின்பற்றி நடப்பதே சாலவும் சிறந்ததென்று வாதாடுகின்றனர். அத்துடன், ஷாபிஈ மத்ஹபே, மிகச் சிறந்த தென்றும் மேன்மையான தென்றும் கருதுகின்றனர்.

வாஸ்தவமாகவே, இமாம் ஷாபிஈ (ரஹ்) வுடைய மர்த்தபாவும் மகிமையும் மிக மிக உந்நதமானவைகளேயாகும்.

### 'குறைஷ்' குலப் பெருமையாளர்

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் 'அன்னாஸு தாபி உன் லி குறைஷ்' என்று திருவுளமானதாக ஒரு ஹதீது ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது: "ஜனங்கள் குறைஷையையே பின்பற்றுவார்கள்" என்பது அந்த அரபு வாக்கியத்தின் பொருள்.

அரபுகளில் 'குறைஷ்' இனத்தார், ஒழுக்கத்திலும் மேதை மரியாதையிலும் சிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், குறைஷ் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பிரசித்தம். எனவே, அரபு நாட்டு ஜனங்

கள் அக்காலத்திலும் பிற்காலத்திலும், குறைஷியர்களைப் பெருமைப் படுத்தி, சமுதாய விஷயங்களில் அவர்களையே பின்பற்றி நடந்து வந்தார்களென்பதில் சந்தேகமில்லை. இதை யொட்டியே, நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், 'ஜனங்கள் குறைஷ் களைத் தான் பின்பற்றுவார்கள்' என்று திருவுளமானார்கள்.

இங்கொரு விஷயத்தை யாம் குறிப்பிட விரும்புகின்றோம். இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் 'குறைஷ்' வம்சத்தைச் சேர்ந்தவர் களே என்பதாகும் அது. இதை ஆதாரமாகக் கொண்டேதான், சில முகல்லிதீன்களும் முஃப்தகிதீன்களும், எல்லோரும் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களையே, மத்ஹபு விஷயத்தில் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றனர்.

சில அரபு மொழிப் புலவர்கள், இக்கருத்தைக் கொண்டு கவிதை களையும் புனைந்து வைத்திருக்கிறார்கள். அவற்றில் இரண்டொன்றின் கருத்தாவது:—

(1) "நாம் இமாமாக ஏற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களே யாவர். அவர்கள் தான், நம்மை எல்லா எதிர்ப்பாளர்களை விட்டும் காப்பாற்றுவார்கள்."

(2) "நமது இமாம், உலகத்தின் எல்லா ஜனங்களுக்குமே இமா மாவர். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் 'குறைஷ் குலத்தில் தான் இமாம் தோன்றுவர்' என்று கூறியுள்ளார்கள்."

## இமாம் என்றால் யார்?

"அல் அயிம்மது மின் குறைஷ்" என்றொரு ஹதீதும் எடுத்துக் கூறப்படுகிறது. இந்த ஹதீது ஸஹீஹானதா, நம்பிக்கை வாய்ந்ததா, ஆதார பூர்வமானதா என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனின், 'இமாம்' என்றால் 'மத்ஹபு விஷயங் களில் வழி காட்டுபவர்' மட்டு மல்ல. மற்ற நல்ல விஷயங்களில் வழி காட்டுபவர்களையும் 'இமாம்' என்று சொல்லலாம். ஜனங்களை முன் னின்று நடத்திச் செல்லும் தலைவர்கள், ஒரு வகையில் இமாம்களே யாவர். சில பேர்களுக்கு முன்னால் நின்று தொழ வைப்பவரையும் நாம் 'இமாம்' என்று சொல்கிறோ மல்லவா?

நமது இஸ்லாமிய ஷரீஅத்துச் சம்பிரதாயப்படி ஹனபி, ஷாபிஈ, மாலிகி, ஹன்பலி-ஆகிய நான்கு மத்ஹபுகளையும் முஸ்லிம்கள் ஒத்துக் கொண்டே தீரவேண்டும். அதாவது ஏதேனும் ஒரு மத்ஹபின் இமா மைப் பின் பற்றியே ஆக வேண்டும். அங்ஙனம் பின் பற்றாமல் முரண் பாடு பேசி நடப்போர், 'கைர் முகல்லித்'களும், வஹ்ஹாபிகளும், ஷீ ஆக்களுமாவர். எனவே, இமாமில்லாத எந்த மத்ஹபுக்காரரும் இகபர ஈடேற்றம் பெற மாட்டார்.

## இமாம் ஷாபிஈ பற்றிய ஸ்தோத்திர வரலாறு நூல்கள்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய கல்வி அறிவைப் பற்றியும், மேதா விலாசத்தைப் பற்றியும் அரபு மொழியில் அநேக கித்தாபுகள் இயற்றப்பட்டிருக்கின்றன. சில நூலாசிரியர்கள் அபிமானத்தினுல் அதிகம் புகழ்ந்தும் ஸ்தோத்திரித்தும் எழுதியுள்ளார்கள்.

"இமாம் ஷாபிஈ (ரஹ்) உடைய 'மனுகிபு' (வரலாறு மகிமை) பற்றி 'பதினேழு' கிதாபுகள் இயற்றப் பட்டிருக்கின்றன" என்று இப்னு காகான் பாஜில் ஷேக் என்பார் கூறியுள்ளார்.

'கஷ்புல் ஷுனூன்' என்னும் நூலில், அதை விட அதிகமான எண்ணிக்கையில், இமாம் ஷாபிஈயின் வரலாற்று மகிமை நூல்கள் இருப்பதாக, குறிப்பிடப் பட்டிருக்கிறது. கீழ்க்காணப்படும் சில நூல் பெயர், ஆசிரியர் பெயர் விபரங்களும் அதில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

(1) அபுல் ஹஸன் முஹம்மத் பின் அப்துல்லாஹிர் ராஜீ அவர்கள் ஒரு வரலாற்று நூல் இயற்றி யுள்ளார்கள். இந்நூலாசிரியர் ஹிஜ்ரீ 347—ல் இறந்து போனுர்கள். இது மிகப் பெரிய நூலாம்.

(2) அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் ஸலாமத்துல் கலாயீ என்பார் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 454—ல் இறந்து போனுர்.

(3) அபுல் ஹஸன் முஹம்மத் பின் அல்ஹஸனுல் ஸஜ்தானியுல் அல்பரி என்பார் ஓர் நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 363–ல் இறந்து போனுர்.

(4) அல் இமாம் தாவூது பின் அலிய்யுல் லாஹிரி அஸ்பஹானி என்ற பேரறிஞர் ஒரு நூல் இயற்றி யுள்ளார். இவர் ஹிஜ்ரீ 470–ல் இறந்து போனுர்.

(5) அபுல் மன்ஸூர் அப்துல் காதிர் பின் தாஹிருல் பக்தாதி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 429—ல் இறந்து போனுர்.

(6) அப்துல்லாஹ் அப்ரீ பின் ஷாக்கிருல் கிதான் என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் இறந்து போன வருஷம் தெரியவில்லை.

(7) இமாமுல் ஹரமைன் அபுல் மஆலி அப்துல் மலிக் பின் அப்துல்லாஹில் ஜூத்தனி என்பார் இயற்றியுள்ள நூலில், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய மனுகிப் என்னும் பிறப்பு வளர்ப்பு ஜீவிய மகிமை கூறப்பட்டிருப்பதோடு, இமாம் ஷாபிஈ (ரஹ்) போதித்துள்ள மத்ஹபு, ஷரீஅத்துச் சட்ட திட்டங்கள், மற்ற இமாம்களின்

ஷரீஅத்துச் சட்ட திட்டங்களை விட மேலானவை என்று தர்க்க ரீதியாக ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பெரியார் ஹிஜ்ரீ 478-ல் இறந்து போனார்கள்.

(8) இமாம் அஹ்மத் பின் ஹுஸைனுல் பைஹகி அவர்களும் ஒரு நூல் இயற்றியுள்ளார்கள்; இப்பெரியாரும் ஹிஜ்ரீ 478—ல் இறந்து போனார்கள்.

(9) அபூ முஹம்மத் பின் அல்ஸிராத் இஸ்மாயீல் பின் அஹ்மதுல் ஹிராவி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 414—ல் இறந்து போனார்.

(10) அபூ அலிய்யுல் ஹஸன் பின் அல்ஹுஸைனுல் ஹதானி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இப்பெரியார் ஹிஜ்ரி 555-ல் இறந்து போனார்.

(11) அபூ அப்துல்லாஹ் பின் யூஸுபுல் ஜிர்ஜானியுல் காஜீ அவர்களும் நூல் இயற்றியுள்ளார்கள். இப்பெரியார் ஹிஜ்ரி 489-ல் இறந்து போனார்கள்.

(12) அப்துர் ரஹ்மான் பின் ஹாத்திமுர் ராஜீ அவர்களும் ஒரு நூல் இயற்றினார்கள்: இவர்கள் ஹிஜ்ரி 337-ல் இறந்து போனார்கள்.

(13) அபூ அப்துல்லாஹ் முஹிப்புத்தீன் முஹம்மத்பின் முஹ்மூதுல் புகாரி பக்தாதி என்பாரும் ஒரு நூல் இயற்றினார். இவர் ஹிஜ்ரி 643-ல் இறந்து போனார்.

(14) இமாம் இமாதுத்தீன் அபுல் பிதா இஸ்மாயீலுத் தமஷ்க்கி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவரது மரண காலம் தெரியவில்லை.

(15) இப்னு ஜம்காஹுல் ஹம்தானி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 778-ல் இறந்து போனார்.

(16) இமாம் புர்ஹானுத்தீன் இப்ராஹீம் பின் உமருல் ஜஃபர் என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் ஹிஜ்ரீ 737-ல் இறந்து போனார்.

(17) அல்காஜி தகிய்யுத்தீன் அபூபக்ரு பின் அஹ்மத் அத்தமிஷ்க்கி என்பாரும் ஒரு நூல் இயற்றியுள்ளார்: இவர் ஹிஜ்ரீ 851-ல் இறந்து போனார்.

(18) இமாம் நஸ்ரு பின் இப்ராஹீமுல் முகத்தஸீயும் ஒரு நூல் இயற்றினர்; இவர் ஹிஜ்ரீ 490-ல் மரித்தார்.

இங்கு ஒரு சில வரலாற்று நூல்களைப் பற்றியும் அதன் ஆசிரியர்களைப் பற்றியும் மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. "இமாம் ஷாபிஈயின் மனகிபு—வரலாற்று விசேஷங்களை யொட்டி 40-கிதாபுகளும் அதற்கு அதிகமாகவும் இருக்கின்றன" என்று இப்னு முலக்

கின் என்பார், தம் 'அக்துல் மதாஹிப்' என்ற நூலில் எழுதி வைத்துள்ளார். இதெல்லாம் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய மேன்மையை விளக்குவதாகும்.

## இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் மரணம்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பெரும் பெரும் மகான்களைப் போலவே, தமது மரண காலத்தைப் பற்றிச் சிறிது முன்னதாகவே அறிந்து அதற்காகத் தயாராகவே இருந்து வந்துள்ளார்கள்.

ஹஜ்ரத் முஸ்னி என்பார் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய மரண சமயத்தின் போது, அவர்கள் அருகில் வீற்றிருந்தார். அவர், இமாம் அவர்களை நோக்கி, "இமாம் அவர்களே, இச்சமயம் தங்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? அதிகாலை ஸுப்ஹு நேரம் எப்படி கழிந்தது?" என்று கேட்டார்கள்.

அதற்கு இமாம் அவர்கள் "எனது ஸுப்ஹு நேரம், நான் மவுத்துச்கு தயாராகிக் கொண்டிருப்பதில் கழிந்தது. நான், ஆகிரத்துக்குரிய பிரயாணத்துக்கு ஸாமான்களை சேகரம் செய்து கொண்டுள்ளேன். அதிசிக்கிரம் நான் இந்த தொல் வுலகை விட்டுப் பிரியப் போகின்றேன். ஏ எனது இஸ்லாமிய சகோதரர்களே; நான் உங்களை விட்டுப்பிரிய விடை பெற்றுக் கொள்கிறேன். மவுத்துடைய பானகம் என்வாய் அருகில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொற்ப நேரத்தில் அதை நான் பருகிவிடப் போகிறேன். அந்தோ நான் என்னுடைய பாபங்களை சுமந்து கொண்டு அல்லாஹ்வுடைய தர்பாருக்குப் போக விருக்கிறேனே; என்ன பதில் சொல்வேன்......" என்று கூறி தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டார்கள்.

பிறகு சில அரபு பைத்துகளை ஓதி, தவ்பா செய்து, இஸ்திக்பார் (பாப மன்னிப்பு) புரிந்துகொண்டிருக்கையில், அவர்களுடைய ஆவி ஒடுங்கி மவுத்தாகிவிட்டார்கள்.

இதானது வெள்ளிக்கிழமை, ரஜபு மாதம் 30-ந் தேதி, ஹிஜ்ரீ 202-ம் ஆண்டாக இருந்தது. (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

பிறகு அதே தினம், 'கராக்கா ஸுக்ரா' என்ற ஸ்தல கப்ரிஸ்தானில் கல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இமாமின் கப்ரை, அக்காலம் தொடுத்து இக்காலம்வரை, அபிமானிகள் பல்லோர் அனுதினமும் ஜியாரத்து செய்து வருகிறார்கள். ஆண்டவன் அவர்கள் ஆன்மாவுக்கு ரஹ்மத்து செய்வானாக. ஆமீன்.

முற்றிற்று.

# தப்ஸீறுல் ஹமீத்
# பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக் குர்ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாக வும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமா அத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப்பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத்தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

| | |
|---|---|
| ஷை முதல் பாகம் | விலை ரூ. 10 |
| ஷை இரண்டாம் பாகம் | விலை ரூ. 10 |
| ஷை மூன்றாம் பாகம் | விலை ரூ. 10 |
| ஷை நான்காம் பாகம் | விலை ரூ. 10 |
| ஷை ஐந்தாம் பாகம் | (அச்சாகிறது) |

[எல்லாவற்றிற்கும் தபால் சார்ஜ் (போஸ்டேஜ்) வேறு.]

# உர்து ஸலீஸ் காயிதா

இது உர்து கற்றுக் கொள்வதற்கு சுலபமான பாலர் பாடம். இதில் படங்களைக் கொண்டு இலகுவாய் குழந்தைகள் உர்து வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள புதிய முறையில் போடப்பட்டுள்ளது. இரண்டு கலர்களில் அச்சிடப்பட்டது.

இதன் விலை நயா பைசா. 32

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# திருக் குர்ஆன் : : : :
# : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## ஸபா ராணி—ஸுலைமான் நபிக்கு இணங்கிய ருசிகரக் கதை.

(ஹஜ்ரத் ஸுலைமான் நபியாகிய) அவர், பட்சி இனங்களெல்லாம் தன் சமுகத்தில் ஆஜராக வேண்டு மென்றார். எனவே (எல்லாப் பட்சிகளும் வந்தன; 'ஹுத் ஹுத்' பட்சி மாத்திரம் வரக்காணோம்.) "இதென்ன விஷயம்! ஹுத்ஹுதை நான் (இங்குக்) காணவில்லையே; (என் கண்களுக்குத் தெரியவில்லையா?) அல்லது அது இங்கு வரவே இல்லையா? அப்படி (அது வராதிருந்துவிட்டதா)னல் அதற்கு நான் கடுமையான தண்டனையைக் கொடுப்பேன்: அல்லது அதை (தபஹ் செய்து) கொன்றுபோடுவேன். அங்ஙனம் அது (இச்சபைக்கு வரா திருந்து விட்டதாயின்) சரியான காரணத்தை என் முன் கொண்டு வந்து சொல்லட்டும்" என்று (ஸுலைமான் நபி கடிந்து) கூறினர்.

சிறிது நேரஞ்சென்று (ஹுத்ஹுத் பட்சி வந்தது;) வந்து இவ்வாறு (ஓர் அதிசயத் தூது) சொல்லத்தொடங்கியது:—"(நபியே) எனக்கொரு (புதுமையான) விஷயம் தெரியவந்திருக்கிறது; அது உங்களுக்கு (இதுகாறும்) தெரிய வந்திராது. அதாவது, நான் தங்கள் சமுகத்திற்கு, ஸபா தேசத்தின் ஓர் உண்மையான செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன். (அது யாதெனில்: அந்த ஊரில்) நான் ஒரு பெண்மணியைப் பார்த்தேன். அவள் (பிரஜைகளாகிய) அந்த ஊரார் மீது ராஜ்யாதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறாள். சகல விதமான சௌகர்ய சாதனங்களும் அவளிடம் ஆயத்தமாய் இருக்கின்றன. மேலும் அவளிடம் ஒரு மிகப் பெரிய (அரிய) சிம்மாசனம் இருக்கிறது. நான், அந்த ராணியையும் அவளுடைய பிரஜைகளையும் (எவ்வாறு கண்டேனெனின்) அவர்கள், ஏக இறைவனை (வணங்குவதை) விட்டு, சூரியனுக்கு சாஷ்டாங்கம் (நமஸ்காரம்) புரிந்து கொண்டிருந்தனர். ஷைத்தானனவன் அவர்களுடைய (தீய) செயல்களை அவர்கள் எதிரில் நல்லனவாக எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தான். மேலும் இதனல் அவர்களை, (நேரான) பாதையை விட்டும் தடுத்துக் கொண்டிருந்தான். இதனை முன்னிட்டு, அவர்கட்கு விமோசன மார்க்கம் கிடைக்க மாட்டாது. இறைவன் ஒருவன் முன்தான் சிரவணக்கம் செய்ய வேண்டுமென்பது கூட அவர்கட்குத் தெரியவில்லை போலும்!

அவ்விறைவனே, வானத்திலும் பூமியிலும் மறைந்திருக்கும் விஷயங்களை யெல்லாம் பகிரங்கப் படுத்தக் கூடியவனாக இருக்கின்றான். (ஜனங்களே,) நீங்கள் ஒரு காரியத்தை மறைத்துச் செய்தாலும் சரி, அல்லது (அதை) பகிரங்கப்படுத்திச் செய்தாலும் சரி. அதை யெல்லாம் அ(வ்விறை)வன் (நன்கு) அறிகின்றான். அல்லாஹ் (தஆலா, இன்னும் எப்படிப்பட்டவ னென்றால்) வணக்கத்துக் குரிய தெய்வம் அவனைத் தவிர யாருமில்லை. அவனே (உன்னதமான) அர்ஷுக்கும் உரியவனாக இருக்கின்றான்'' என்பதாகும்.

(அதைக் கேட்டு) சுலைமான் (நபி), அதற்கு மேலுரை (கட்டளை) கூறியதாவது:—(ஏ ஹுத்ஹுதே,) நீ கூறுவது உண்மையா, பொய் (கட்டுக்கதை)யா என்பதை யானும், உன்னைக் கொண்டே பரீக்ஷித் தறிய விரும்புகின்றேன். நீ என்னுடைய இந்தக் கடிதத்தைக் கொண்டு (பறந்துப்)போ; இதை அவள் புறம் (தெரியாமல் அவள் அருகில்) போட்டுவிடு; பிறகு நீ (தனியே) ஒதுங்கியிருந்து விடு; பிறகு, (இந்தக் கடிதத்தின் பயனாக) அந்த ஜனங்கள் என்ன (நடவடிக்கை எடுத்துப்) பதில் கூறுகின்றனர் என்பதை (பொறுத்திருந்து)ப் பார்'' என்பதாகும்.

(அங்ஙனமே, அந்த ஹுத்ஹுத் பட்சி, சுலைமான் நபியுடைய கடிதத்தைக் கொண்டுபோய் ஸபா ராணி முன் சேர்ப்பித்து விட்டது; ராணி அதைப் படித்துப் பார்த்து விட்டு, தன் பிரதானிகளை நோக்கி) "ஏ என் சபையோர்களே, என் சமுகத்துக்கு, மிகப் பாராட்டத்தக்க ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அது (நபியாக விளங்கும்) சுலைமானிடமிருந்து (எனக்கு) வந்துள்ளதாகும்; அது 'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்' (அருளாளனும் அன்பாளனுமான அல்லாஹ்வுடைய பெயர்) கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (அதில்) மேலும் வரையப்பட்டிருக்கும் கட்டளையாவது:"(ஸபா வாசிகளாகிய) நீங்கள், எமக்கு மாறுபாடு செய்யாதீர்கள்; இணங்கி (வழிப்பட்டு) நடந்து கொண்டு, என் சமுகத்திற்கு வந்து சேருங்கள்...(ராணி, சுலைமான் நபியுடைய கடிதத்தின் முழு வாசகத்தை படித்துக் காட்டி விட்டு) மேலும் (அவள்) சொன்னதாவது: "என் அமைச்சர்களே, (உங்களுக்கு என் விவகாரம் நன்றாய் தெரியும்) அதாவது: (உங்களை) சபைக்கு அழை(த்துக் கல)க்காமல், (உங்களைக் கலந்து ஆலோசிக்காமல்,) நான் ஏதொரு காரியத்திலும் முடிவு செய்வதில்லை. எனவே, இந்த விவகாரத்தில் நீங்கள் எனக்கு (தகுந்த) ஆலோசனை கூறுவீர்களாக'' என்பதாகும்.

இதைக் கேட்டு (மந்திரி பிரதானிகளாகிய) அவர்கள், கூறியதாவது:- "(ராணி,) நாங்களோ, மகா பலசாலி களாகவும், கடும் போர்க் களத்து சூரர்களாகவும் இருக்கின்றோம்; ஆயினும் (சமுகம் வேண்டுமானால்) இந்த விஷயம் உம்முடைய அதிகாரத்துக்கு(ம்

இஷ்டத்துக்கும்) உட்பட்டதாகும். தாங்கள் நன்கு (ஆராமர) யோசித்து ஒரு கட்டளை பிறப்பி வியுங்கள்."

இதற்கு (ராணியாகிய) அவள் கூறியதாவது:—ஏதேனு மொரு நாட்டில், (யுத்த நோக்கங் கொண்டு) படை யெடுத்து ஓர் அரசன் பிரவேசிப்பானாயின், (முதலில்) படைகள், அந்த நாட்டை அழித்துப் போடுகின்றனர்; அங்குள்ள கௌரவஸ்தர்களை அவமானப் படுத்துகின்றனர். ஆகையால் (நம் விஷயத்திலும், சுலைமானின் படைகள்) இப்படியே செய்யக் கூடும். (இத்தகைய போராட்டம் நேரிடாமல் தற்காத்துக் கொள்வதற்காக) நான், அவர் சமுகத்திற்கு சில (விலையுயர்ந்த அரிய) சன்மானங்களை அனுப்பி வைக்கின்றேன். (இதைக் கொண்டு போய்ச் சேர்க்கும்) தூதுவன், (அங்கிருந்து) என்ன கொண்டு வருகிறான் என்று பார்க்கப் போகிறேன்," (என்று கூறினாள். உடனே, ராணி ஸபா, சுலைமான் நபியின் திருச்சமுகத்துக்குச் சில அரிய பொருட்களை சன்மானங்களாக அனுப்பி வைத்தாள்.)

அங்ஙனம் தூதுவன் (சன்மானப் பொருட்களைக் கொண்டு) சுலைமானுடைய தர்பாரில் வந்து சேர்ந்த போது (அதைப்பார்த்து விட்டு சுலைமான் நபி) கூறியதாவது:— "ஓ, நீங்கள் எனக்கு (சன்மானப்) பொருட்களைக் கொண்டு உதவி செய்ய வந்து விட்டீர்களோ, இறைவன் எனக் கருள் புரிந்திருப்பவை, அவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் இதை விட (அதிகமும்) நேர்த்தியானது மாகும். இந்த (அற்ப) சன்மானப் பொருட்களைக் கொண்டு சந்தோஷ மடையக் கூடியவர்கள் நீங்களேதான். (எனக்கு இந்த் சாமான்கள் வேண்டியதில்லை)" என்று, சுலைமான் நபி மறுத்து விட்டு, அந்த தூதவனைப் பார்த்து மேலும் (சொன்னதாவது.) "நீ, இதை அவர்களிடத்திலே (உன் ராணியிடத்திலேயே) திரும்பிப் போய்ச் சேர். மேலும் அவர்களிடத்தில் (எச்சரிக்கையாய்) சொல்லி விடு; நாங்கள் கூடிய சீக்கிரம் மிகப் (பலம் பொருந்திய) படைகளை(த்திரட்டிக்) கொண்டு, தாக்குதல் புரிய வரப் போகிறோம்; எங்களை எதிர்த்துப் போரிட அவளால் (ஒரு சிறிதும், எவ்வாற்றாலும்) முடியவே முடியாது; மேலும் நாங்கள் (உங்கள் ராணி சகிதம்) அவர்களை, அவர்களுடைய ஊரை விட்டே, மான ஹீனப் படுத்தி விரட்டி அடித்து விடுவோம்; எனவே சீர் அழிந்துப் போவார்கள்" என்பதாகும்.

(அந்தத் தூதுவன், வந்த வண்ணம் திரும்பிப் போன பின்னர், சுலைமான் நபியாகிய) அவர், (தம் பிரதானிகளை நோக்கிக்) கூறியதாவது:—ஏ சபையோர்களே! உங்களில் யாரேனும் தகுதியாளர் இருக்கின்றீரா?) அதாவது) அந்த ஜனங்கள் சுயமே (உணர்ந்து) வழிபட்டு , (ப்பணிந்து) எமது சமுகத்திற்கு வருமாறு செய்யக் கூடியவர் (உண்டா?) மேலும் அந்த ராணியுடைய (அரிய)

சிம்மாஸனத்தை தூக்கிக் கொண்டு வந்து எம்மிடம் சேர்க்கக் கூடியவர் உண்டா?" என்று கேட்டார்.

அதைக் கேட்டு ஜின்னுத் களிலிருந்து ஒரு பூதம் முன்வந்து, (சுலைமான் நபிக்குப் பணிந்து) சொல்லியதாவது:—(அரசே, இந்த சபை கலைந்து) தாங்கள், இந்த இடத்தைவிட்டு எழுந்துச்செல்வதற்கு முன்னதாகவே, நான் அந்த (அரிய) சிம்மாஸனத்தை, தங்கள் சமுகத்தில் கொண்டுவந்து சேர்த்து விடுகிறேன்; இப்படி சாதிப்பதற்கு என்னிடம் வல்லமை யுண்டு. மேலும் நான் (தங்களிடம்) நம்பிக்கைக்கு உரியவனுகவும் இருக்கின்றேன்," (என்பதாகும்.)

இதல்லாமல், வேதாகம ஞான(ம் என்னும் இஸ்மெ அஃலமாகிய மந்திர தந்திர) சக்தியுடைய வேறு ஒருவனும் (அப்போது சுலைமான் நபியை நோக்கி) "இதோ நான், தாங்கள் கண் மூடி கண் திறப்பதற்கு முன்னதாகவே அந்த சிம்மாஸனத்தைத் தங்கள் சமுகத்தில் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறேன்" என்று சபதம் கூறினுன்.

(எவ்வகையாலோ, மேற்படி சிம்மாஸனம் வந்து சேர்ந்து விட்டது.) மேலும் சுலைமான் (நபி) தம் முன் அந்த சிம்மாஸனம் (கொண்டு வந்து) வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துச் சொன்னதாவது:-"இதுவும் என்னுடைய இரக்ஷகனின் (ஓர்) அருட்பாக்கியமேயாகும்; நான் நன்றி (ஷுக்ரு) செய்கிறேனு அல்லது நன்றி கெட்டவனுய் விடுகிறேனு என்று (இதைக் கொண்டு) அவன் என்னை பரிசோதித்து அறிகின்றுன். எனவே எவன் (இறைவனுக்கு) நன்றி செய்கின்றுனே அவன், தனக்கே நன்றி செய்து கொள்கிறவனுகின்றுன்; மேலும் எவனேனும் இறைவனுக்குநன்றிகெட்டவனுக நடந்தாலும் சரியே. என்னுடைய இரக்ஷகன், (அந்த ஜனங்கள் நன்றி செலுத்தினுலும் நன்றி செலுத்தாவிட்டாலும் அதைப் பற்றியெல்லாம்) லக்ஷியம் செய்யாதவனுய் (தேவையற்றவனுய்) இருக்கின்றுன்."

மேலும் சுலைமான் நபி, (சிறிது தாமதித்து) தம் பணியாட்களை நோக்கி "ராணி (யை பரீக்ஷை பார்ப்பதற்)க்காக வேண்டி, (இந்த) சிம்மாஸனத்தின் தோற்றத்தை மாற்றி அமைத்து விடுங்கள். (ஆண்டவன் கருணையினுல் நமக்கு கிடைத்துள்ள சாமார்த்திய—சாதனங்களின் பொருட்டால்) அன்னவள், (நேரான, பக்தி) சன்மார்க்கத்தின் பக்கம் வருகின்றுளா, அல்லது எப்போதுமே நல் வழிக்கு வராதவர்களான அந்த (மூர்க்க) ஜனங்களுடனேயே (சேர்ந்து) இருக்கிறுளா, என்று கண்டறிந்து பார்ப்போம்" என்று கூறினுர்.

அங்ஙனமே (ராணி ஸபா, காதலினுலோ அன்பினுலோ வசப்பட்டு, சுயமே, சுலைமான் நபியுடைய தர்பாருக்கு) அவள் வந்து சேர்ந்த போது, "உன்னுடைய சிம்மாஸனமும், இந்த சிம்மாஸனம் போல் தான் இருந்ததா?" என்று (பரீக்ஷைக்காக) அவளிடம் கேட்

கப்பட்டது. (அறிவுடைய ராணியாகிய) அவள், யாவற்றையும் உணர்ந்து) அறிந்துகொண்டாள்.) மேலும் அந்த ராணி:— "இது (என்னுடைய) அதே சிம்மாஸனமாகவே தான் (என் அபிப்பிராயத்தில் தெளிவாகி) இருக்கிறது" என்று கூறி விட்டு, மேலும் (சுலைமான் நபியை நோக்கிக்) கூறியதாவது:—"எங்களுக்கு, இதற்கு (இந்த சம்பவங்களுக்கு) முன்னரே, தாங்கள் (நபி என்ற) விஷயம் தெரிய வந்துவிட்டது. நாங்கள் அப்போதே (தங்கள் மீது) நம்பிக்கை (ஈமான்) கொண்டு விட்டோம்" என்று சொன்னாள்.

ஆயினும் (ராணி என்ற முறையில்) அவள், காபிர் கூட்டத்திலேயே சேர்ந்தவளாயிருந்தாள். அவள் (பிறருடன் சேர்ந்து) இறைவனல்லாததை வணங்கிக் கொண்டிருந்த விஷயங்களே, அவளை, சுலைமான் நபியிடம் (ஈமான் கொள்ள) வராமல் படி தடுத்து வைத்திருந்திருந்தன. (அதாவது, குப்ரியத்திலும் சூரிய வணக்கத்திலும் அவள் சதா மூழ்கிக் கிடந்ததால், சுலைமான் நபியிடம் சுயமே வருவதற்கு அஞ்சிக் கொண்டிருந்தாள்.)

(பரிசோதனை முடிந்து) 'தாங்கள் அரண்மனைக் குள்வாருங்கள்' என்று (மரியாதையோடு, ஸபா தேசத்து) ராணியிடம் கூறப்பட்டது. எனவே (அழைப்புக் கிணங்கி விருந்தினளாய்) அவள், அரண்மனை (அந்தப்புரம்) நோக்கிப் போகும் போது, அங்கு மாளிகையில் நீர் நிலைத் தடாகம் போல் தண்ணீர் இருப்பது அவளுக்குப் புலப்பட்டது. எனவே ராணி (தண்ணீரில் தன்கீழ் உடை நனைந்துப் போகாதிருக்க, தன் உடைகளை தூக்கிப் பிடித்துக் கொண்டாள்.) இதனால் அவள், இரண்டு கால்களையும் (முட்டுவரை எல்லோருக்கும்தெரியும்வண்ணம்) திறந்து விட்டாள். (நோட்ட மிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த நபி சுலைமான்) இதைக்கண்டு, (பெண்ணின் பேதைமையைக்கண்டு) "ஓ, இது (தண்ணீர் அல்ல; இதுவும்) அரண்மனை (விரிப்பு) தான். தரை மீது கண்ணாடி அமைக்கப்பட்டிருக்கிறது; (அதன் கீழ் தான்) தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது; (இதைக் கண்டு ஏமாந்து விட்டாயே)" என்று கூறினர்.

ராணி (ஸபா) சுலைமான் நபிக்குரிய இகலோக யூக, சாதனங்களையும், சன்மார்க்கப் பெருந்தகைமைகளையும் கண்டு, பெரிதும் (மனம் உவந்து) உணர்ச்சி வசப்பட்டு, (இறைவனை நோக்கி இவ்வாறு பிரார்த்திக்கலானாள்:—) "என் இரக்ஷகனே, நான் அறியாமையில் மூழ்கியிருந்தேன். (சூரியன், விக்கிரஹம் முதலியவற்றை வணங்கி வந்ததால்) என் ஆத்மாவின் மீதே நான் அநியாயம் செய்து கொண்டேன். இப்போது நான் (தவ்பா செய்து, நம்பிக்கை வைத்து, நபி) சுலைமானுடன் சேர்ந்துக் கொண்டு விட்டேன். சர்வலோக ரக்ஷகனாகிய அல்லாஹ்மீது (அவன் ஒருவனேநாயன்) என்று நான் கொள்ளுகிறேன்" என்று அறுதியிட்டு உறுதி கூறினள். (ஜுஸ்வு: காலல்லதீன; ஸூரா: நமல்; ருக்கூ: 2, 3.)

(தொடரும்)

187064

# மிப்தாஹுஸ்ஸலாஹ்
# பீ யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரி புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி யிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பி லிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

விலை ரூ. 3

# நபிநாயகத்தின் திருவாக்கியம்

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற்பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு.

விலை ரூ. 2–40

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

## ஹிஜ்ரீ-133.

(1) முதலாவது ஸப்பாஹ் அபுல் அப்பாஸ் அவர்கள், தம் ஆட்சி காலத்தில், ஆட்சிமுறை காரியாலயங்களி லிருந்து அரபு உத்தியோகஸ்தர்களை யெல்லாம் நீக்கி விட்டு, அவர்களின் ஸ்தானத்தில் துருக்கியர்களை ஏற்படுத்தி அமர்த்தினர்.

(2) இன்னவர் தம் ஆட்சியில், மதீனா முனவ்வரா, மக்கா முஅல்லமா, யமன், யமாமா ஆகிய நகரங்களை யெல்லாம் ஒரே மாகாணம் என்று நிர்ணயம் செய்து வைத்தார். அத்துடன் முதலாவது ஸப்பாஹ் (அதிகாரி), தமது சிறிய தகப்பனுரான தாவூத் பின் அலி என்பாரை, அந்த அரப் பிரதேசங்களுக்கு கவர்னராக (அதிகாரியாக) நியமனம் செய்து வைத்துக் கொண்டார்.

(3) அன்னவர் தம் இன்னொரு சிறிய தகப்பனுரான அப்துல்லாஹ் பின் அலி என்பவரை, ஷாம் (சிரியா) தேசத்துக்கு கவர்னராக (அதிகாரியாக) நியமனம் செய்து வைத்தார்.

## ஹிஜ்ரீ-134.

முதலாவது ஸப்பாஹ் என்ற அதிகாரி, இவ்வாண்டு, தமது சகோதரனை அபூஜஃபர் மன்ஸூர் என்பாரை தம் ஆட்சி பாரத்துக்குட்பட்ட ஆஜர்பாய்தான் திபகர்ப்பம், ஆர்மேனியா ஆகிய பிரதேசங்களுக்கு, சுயேச்சாதிகாரியாக நியமனம் செய்து வைத்தார்.

## ஹிஜ்ரீ-135.

(1) மேற் சொல்லப்பட்ட முதலாவது ஸப்பாஹ், இதுகாறும் தமது ‘தாருல் கிலாபத்தாக’ இருந்து வந்த கூபா நகரத்தை விட்டுப் போட்டு, இவ்வாண்டு முதல், பக்தாதிலிருந்து மேற்குத் திசையில் புர்ராத் நதிக்கரை ஓரத்தில் இருந்து வந்த ‘அன்பார்’ என்ற சிற்றூரை தனது புதிய தாருல் கிலாபத்தாக ஸ்தாபிதம் செய்து கொண்டார்.

(2) மாபெரும் ஆலிமும் இஸ்லாமியப் பெரியாருமான அப்துல்லாஹ் பின் அபீபக்கர் (ரலி) அவர்கள், இவ்வாண்டு மதீனமா நகரில் மவுத்தாய் இறந்து போனர்கள்.

(3) தாபிஈன்களில் ஒருவரும் இஸ்லாமியப் பெரியாருமான தாவூத் பின் அல்ஹஸ்ஸீன் அவர்களும் இவ்வாண்டு மவுத்தாய் (இறந்து) விட்டார்கள்.

(4) அப்துல்லாஹ் பின் ஹபீப் என்ற ஓர் அதிகாரி, ஸக்லிய்யா தீவுப் பிரதேசம் மீது இவ்வாண்டு படை யெடுத்துச் சென்றார்; இதில் அவருக்கு மகத்தான வெற்றியும் கிடைத்தது.

## ஹிஜ்ரீ-136.

(1) இஸ்லாமிய சரித்திரத்தில், பிற்காலத்தில் பெருங்காரியங்களை சாதித்த முதலாவது ஸப்பாஹ் (அபுல் அப்பாஸ்) என்ற பேரதிகாரி, தமது 32-ம் வயதான யௌவனத்திலேயே, தாஊன் என்னும் (பிளேக்) நோயால் பீடிக்கப்பட்டு, இவ்வாண்டு துல்ஹஜ்ஜு மாதம் 13-ந் தேதி இறந்து போய் விட்டார். அப்போதே அவரது சகோதரான அபூஜஃபர் மன்ஸூர் என்பார், பனு அப்பாஸியாக்களின் இரண்டாவது (ஸப்பாஹ்) கலீபாவாக அரியாசனத்தில் அமர்ந்து கொண்டார்.

(2) கூபாவில் மிகவும் ஆலிமாகவும், பிரதம பகீஹாகவும், மத போதகராகவும், உத்தமப் பெரியாராகவு மிருந்து வந்த ஹஜ்ரத் அப்துல் மலிக் பின் உமர் அவர்கள், தமது 101-ம் வயதில் வபாத்தாகி இறந்து போனார்கள்.

(3) மதீனமா நகரில் வாழ்ந்து வந்தவரும் தாபிஈன்களில் ஒருவருமான ஜைதுபின் அஸ்லம் (ரலி) அவர்கள், இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-137.

மன்ஸூர் என்பவர், கலீபா பதவிக்கு வந்ததும் அபூ முஸ்லிம் குராஸானியை கொன்று போடச் செய்தாரல்லவா? அங்ஙனம் மாண்டவர் ஈரானிய வம்சத்தினராதலால், ஈரானில் அதைப் பற்றிய 'பழிக்குப் பழி' என்னும் பகைமைத்தீ புகைந்து கொண்டிருந்தது. இவ்வாண்டு அது ஜுவாலை விட்டெரியத் தொடங்கிவிட்டது. அனுதாபிகளின் கூட்டம் அதிகரித்து, ஈரானியர் பலம் பெறத்தொடங்கி விட்டனர். எனவே, இதைக் கண்டு கலீபா மன்ஸூர் நடுக்கம் கொள்ளலானார்; அப்பாஸிய கிலாபத் ஆட்சிக்கு ஆபத்து நேரிட்டு விடுமோ என்று மன்ஸூர் பயப்படலானார்.

## ஹிஜ்ரீ-139.

(1) உமய்யாக்களைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் (பின் முஆவியா பின் ஹிஷ்ஷாம்) என்பவர், இவ்வாண்டு அந்துலுஸ் (ஸ்பெ

யின்) தேசத்தைப் பிடித்து வெற்றி கொண்டு ஆட்சி செலுத்த லானர்.

(இச்சம்பவம் தொடுத்து நானூறு வருஷ காலம் அவர்களுடைய வம்சாவழி பிள்ளைகளே, அந்துலுஸை 'முஸ்லிம் ராஜ்யம்' என்ற பெயரால் ஆட்சி செலுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது).

(2) ரோமாபுரியைச் சேர்ந்த ரோமர்கள் (கிறிஸ்துவர்கள்) இஸ்லாமிய ஆட்சிக்கு விரோதமாக, இவ்வாண்டு கடும் புரட்சியை ஆரம்பித்தனர். ரோமர்கள், மதத்தின் பெயரால் படையெடுத்து, மல்திய்யா என்ற ஸ்தலத்தில் இருந்த இஸ்லாமிய ஆட்சியின் பீடத்தையும் சிம்மாஸனத்தையும் இவ்வாண்டு தகர்த்து எறிந்து நாசப் படுத்தி விட்டனர்.

(3) பிறகு இதை யறிந்த மன்ஸூர், இஸ்லாமியப் பெரும் படைகளைத் திரட்டி, அந்த ரோமக் கிறிஸ்துவர்களை ஒழித்துக் கட்டுவதற்காக அனுப்பி வைத்தார். முஸ்லிம் வீரர்களுக்கு ஜெயம் கிடைத்தது. மல்திய்யா பிரதேசம் மீண்டும் முஸ்லிம்கள் கைக்கு வந்தது, கலீபா மன்ஸூர் மீண்டும் அதை செழிப்புறச் செய்தார்.

## ஹிஜ்ரீ-140.

(1) ரோமக் கிறிஸ்துவர்கள், இவ்வாண்டு சமயம் பார்த்து மீண்டும் மல்திய்யா மீது படை யெடுத்தனர்; ஆனால், ரோமர்களின் எதிர்த் தாக்குதல் கடுமையாக இருந்ததால், சமாளித்து நிற்க முடியாமல், பிற்காலால் வைத்து ஓடிவந்து விட்டனர்.

(2) கலீபா மன்ஸூர், பக்தாத் நகரை நல்ல பட்டணமாக்கவும், பெருங் கட்டிடங்கள் எழுப்பவும் இவ்வாண்டு திட்டம் போட்டு காரியம் செய்யலானர்.

(3) பிற்காலத்தில், மக்கா மாநகரின் காஜீயாகவும் அக்கால ஆலிம் உலமாக்களில் சிறந்தவராகவும் விளங்கிய ஹஜரத் ஸுலைமான் பின் ஹர்ப்—பஸ்ரீ (றஹ்) அவர்கள், இவ்வாண்டே பிறந்தார்கள்.

## ஹிஜ்ரீ-141.

(1) இவ்வாண்டு, இஸ்லாமிய ஜனங்களிலேயே, தனஸுக் (மறுஜன்மம் உண்டு என்ற) கொள்கையுடைய ஒரு கூட்டத்தார் கிளம்பினர்கள். இவர்களை அதிகம் தலை தூக்கிப் பரவாதபடி அழித்து ஒழித்து விட்டார்.

(2) இவ்வாண்டே முஸ்லிம்கள், தப்ரிஸ்தான் என்ற பிரதேசத்தைப் பிடித்து இஸ்லாமியக் கொடியை நாட்டினர்கள்.

## ஹிஜ்ரீ-142.

இஸ்லாமிய சம்பிரதாயத்தில் இவ்வாண்டு, பொன்னெழுத்தால் பொறிக்கத் தக்கதாகும். இஸ்லாமிய உலமாக்கள் ஒன்று கூடி, பேசித் தீர்த்து, ஹதீது கிரந்தங்களையும், பிக்ஹு மஸ்அலா கிதாபுகளையும், திருக்குர்ஆன் விளக்கமான தப்ஸீர்களையும் இயற்றும் புனித கைங்கர்யத்தில் தீவிரமாக ஈடுபட்டார்கள். உதாரணமாக, மக்காமா நகரின் கண், இப்னு ஜரீஹ் (ரஹ்) ஹதீது கிரந்தங்களை இயற்றினார்கள். மதீனுமா நகரில் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், தமது 'முஅத்தா' என்னும் கிரந்தத்தை தயாரிக்கலானார்கள். இமாம் அவ்ஜாயீ (ரஹ்) அவர்கள் ஷாம் தேசத்திலும், ஹஜ்ரத் இப்னு அதாபா அவர்கள் கூபாவிலும், ஹஜ்ரத் ஸுப்யான் ஸவ்ரி (ரஹ்) அவர்கள் தம் ஊரிலும் பலப்பல இஸ்லாமிய ஷரீஅத்துக் குரிய கிரந்தங்களை இயற்றலானார்கள்.

இது மட்டுமல்ல; ஹஜ்ரத் இமாம் அஃஜம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் சட்டங்களைக் கிணங்கி, அவர்களுடைய அருபர்த சிஷ்யரான ஹஜ்ரத் இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்கள், பல பிக்ஹு கித்தாபுகளை இயற்றி சேவை புரிந்தார்கள்.

## ஹிஜ்ரீ-144.

ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களுடைய வம்சவழியில் வந்த முஹம்மத் பின் அப்துல்லாஹ் நப்ஸ ஜகிய்யா என்பார், இவ்வாண்டு, ஹிஜாஸ் (என்னும் அரபு) பிரதேசத்தில், 'கிலாபத் பதவி தமக்கே உரியது' என்ற கொள்கையை வெளிப்படுத்தி, அப்பாஸியாக்களின் கிலாபத் ஆட்சியை அரபு மக்கள் நிராகரித்துவிட வேண்டுமென்று, இவ்வாண்டு புரட்சி இயக்கம் ஆரம்பித்தார்கள்.

## ஹிஜ்ரீ-145.

(1) மேற்படி புரட்சி வளர்ந்தோங்கிற்று. கலீபா மன்ஸுர், இதை யுணர்ந்து பயம் கொண்டு, படைகளைத் திரட்டி, நப்ஸ ஜகிய்யாவை அடக்கி ஒழிப்பதற்காக அனுப்பி வைத்தார். அவ்வாறே, படை வந்து அவரைக் கொன்று அட்டகாசம் புரிந்த பின், புரட்சி அடங்கி விட்டது.

(2) பிறகும் மேற்சொன்ன, நப்ஸ ஜகிய்யாவின் சகோதரர் இப்ராஹீம் என்பார், பஸ்ரா நகரில் புதுப் புரட்சியை தோன்ற வைத்து பிரசாரம் செய்தார். இதன் பயனாய் இவர், ஷீயா ஜனங்களாக ஒரு லக்ஷம் பேர்களைக் கொண்ட படையைத் திரட்டிக் கொண்டு கூபா நகரை நோக்கிப் படை யெடுத்துச் சென்றார்.

பனு அப்பாஸியா (கலீபா) சார்பாக, ஈஸா பின் மூஸா என்ற அதிகாரியும் படை கொண்டு, இவர்களை எதிர்த்துப் போரிட்டார். இப்

போர்க்களத்தில் இப்ராஹீம் கொல்லப்பட்டதோடு, ஷஹீதானவரின் தலையைக் கொய்து, தாருல் கிலாபத்துக்கு, அரசியல் அதிகாரி வசம் அனுப்பி வைக்கப்பட்டது.

## ஹிஜ்ரீ-146.

இவ்வாண்டு அப்பாஸியாக்களின் படைகள், கப்ரஸ் (சைபுரஸ்) என்ற தீபகர்ப்பத்தை பிடித்து வெற்றிக் கொடி நாட்டினர்.

## ஹிஜ்ரீ-147.

(1) பனு அப்பாஸியாக்களின் 4–வது கலீபாவாக, பிற்காலத்தில் விளங்கிய அபூ மூஸா முஹம்மத் அல்ஹாதி என்பார், ரே என்ற இடத்தில் இவ்வாண்டு பிறந்தார்.

(2). கலீபா மன்ஸூர், தமது சிறிய தக்தை ஈஸா பின் மூஸாவை (அதாவது முதல் ஸப்பாஹ் என்பவர். மன்ஸூருக்குப் பிறகு பட்டத்துக் குரியவர் இவரே என்று நிர்ணயம் செய்து வைத்திருந்த பேர் வழியை) அந்தப் பதவியிலிருந்து நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக, தன்னுடைய மகன் மஹதீ என்பானை பட்டத்துக் குரியவன் என்று நிர்ணயம் செய்து வைத்தார்.

(3) பிரபல ஆலிமாகவும் அறிவாளியாகவும் உத்தமராகவும் விளங்கி வந்த ஹிஷ்ஷாம் பின் ஹிஸ்ஸான் அவர்கள், இவ்வாண்டு இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரீ-148.

(1) ஹஜ்ரத் இமாம் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள், தமது 65–ம் வயதில் இவ்வாண்டு ரஜப் மாதம் 15–ந் தேதி திங்கட் கிழமை தினம், வபாத்தாகி இறந்து போனார்கள். இவர்கள் ஜனுஸா, மதீனுவிலுள்ள ஜன்னத்துல் பகீஃ என்னும் உத்யான வனத்தில் கல்லடக்கம் செய்யப் பட்டது.

(2) பனு அப்பாஸிகளின் 5-வது கலீபாவாக பிற்காலத்தில் பிரசித்தியோடு விளங்கிய கலீபா ஹாரூனுர் ரஷீத், 'ரே' என்ற ஊரில் இவ்வாண்டு தான் பிறந்தார்கள்.

(3) அந்தக் காலத்தில், மிகப் பெரும் ஆலிமாகவும் பாஜிலாகவும் மார்க்க ஒழுக்க முடையவராகவும் பெரியாராகவும் விளங்கிய அஃமஷ் இப்னு அபீலைலா அவர்கள், இவ்வாண்டு வபாத்தாகி இறந்து போனார்கள்.

## ஹிஜ்ரீ-149.

கலீபா மன்ஸூர் திட்டம் போட்டிருந்த பிரகாரம், பக்தாத் நகரமானது ராஜதானியாகவும், அழகிய பட்டணமாகவும் மாற நடை

பெற்று வந்த நிர்மாண வேலைகள் இவ்வாண்டு முடிவடைந்து, பக்தாத் அழகிய நகராக காட்சியளித்தது.

## ஹிஜ்ரீ-150.

(1) ஹஜ்ரத் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், இவ்வாண்டே, அஸ்கலான் என்னும் ஊரில் பிறந்தார்கள்.

(2) கலீபா மன்ஸூர், கொடுங் கோலனாக மாறி, மாபெரும் புனிதர் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுக்கு, அவர்களின் அசிரத்தையான சமயத்தில், தெரியாமல் விஷபானம் கொடுக்கச் செய்துவிட்டான். விஷம் புகட்டப்பட்ட விஷயம், இமாம் அவர்களுக்குத் தெரிய வரவே, ஆண்டவனை தியானம் செய்த வண்ணம் ஸஜ்தாவில் பணிந்து விட்டார்கள். ஸஜ்தா செய்த நிலையிலேயே அவர்களின் புனித ஆத்மா, ஸ்தூல ஜடலத்தைப் பிரிந்துவிட்டது. (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.)

முற்றிற்று.


# ஸப்அ ஸனாபில்

(ஹனபி மதுஹபுக்குரியது)

இந்த புஸ்தகத்தில் ஏழு புஸ்தகங்கள் அடங்கி யிருக்கின்றன. அவைகள்: (1) ஜரூருல் மூமினீன் (2) ஜரூருல் முஸ்லிமீன் (3) ஜரூருல் முஸல்லீன் (4) ஜரூருஸ் ஸாயிமீன் (5) ஜரூருல் முஜக்கீன் (6) ஜரூருல் ஹாஜ்ஜீன் (7) ஜரூருத் தாயீன்.

இத்துடன் அம்மயத் ஜுலூ, ஈடேற்ற மாலை இவைகளும் ஞான ரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திருமெஞ்ஞான சரநூல், ஞான நடனம் இவைகளும் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை ரூ. 3

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.



Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.


187064

# பத்ஹுூர் ரஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக் கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹுூ மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜுமுஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜுூ முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3

ஷெ அறபுத் தமிழ் அல்பத்ஹுூர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுூல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

2e


# உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப் பட்டுள்ளது. விலை ரூ. 2–56

# வின்ஸ்டன் சர்ச்சில்

சென்ற மஹா யுத்தத்தில் பிரிட்டன் பிரதமராக யிருந்து, பிரிட்டன் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான ஒரு சமயத் தில் தலைமை வகித்து வந்த வின்ஸ்டன் சர்ச்சிலின் சரித்திரச் சுருக்கம். இதன் விலை ௩ பை. 56

# இங்லீஷ் குர்ஆன்

திருக் குர்ஆன் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு; முஹம்மது மர்மடூக் பிக்தால் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது:

464 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 3

ஷை குர்ஆன் அறபியும் சேர்ந்தது 2 பாகங்கள் ரூ. 15

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.